## 2025–ஆம் ஆண்டு சர்வதேச போதை ஒழிப்பு:

# காவல் அதிகாரிகள் - காவலர்களுக்கு முதலமைச்சரின் பதக்கம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

சென்னை, ஜூன் 27-

2025-ஆம் ஆண்டு சர்வதேச போதை ஒழிப்பு மற்றும் சட்ட விரோத கடத்தல் தடுப்பு தினத்தையொட்டி காவல் அதிகாரிகள் மற்றும் காவலர்களுக்கு முதலமைச்சரின் பதக்கம் வழங்க முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

“மாநிலத்தில் போதைப் பொருள் உற்பத்தி மற்றும் சட்ட விரோத கடத்தலை ஒழிப்பதில் சிறந்து விளங்கிய காவல் துறை அதிகாரிகள்/பணியாளர்களுக்கு “போதைப்பொருள் உற்பத்தி மற்றும் சட்ட விரோத கடத்தல் ஒழிப்பு சிறப்பு பணிக்கான தமிழக முதல்வரின் காவல் பதக்கம்” 2023-லிருந்து வழங்கப்பட்டு வருகிறது.

அதன் பின்னர், மின்சாரம் மற்றும் மதுவிலக்கு ஆயத்தீர்வை துறை அமைச்சர் 22.04.2025 அன்று சட்டமன்றத்தில் மதுவிலக்கு ஆயத்தீர்வை துறை கோரிக்கையில் பதக்கங்களின் எண்ணிக்கை 5-லிருந்து 15-ஆக உயர்த்தப்படும் என்ற அறிவிப்பினை தொடர்ந்து G.O.Ms.No.263 உள் (மி.க)த் துறை நாள் 06.06.2025 அன்று அரசாணை வெளியிடப்பட்டது.

இதன் அடிப்படையில், காவல் துறை தலைமை இயக்குநரின் பரிந்துரைக்கேற்ப முதலமைச்சர் அவர்கள் கீழ்கண்ட காவல் அதிகாரிகள் / ஆளிநர்களுக்கு பதக்கம் வழங்க ஆணை பிறப்பித்துள்ளார்:-

பெயர், பதவி மற்றும் பணிபுரியும் இடம் விவரம் வருமாறு:-

ஆஷிஷ் ராவத், காவல் கண்காணிப்பாளர், சிவகங்கை மாவட்டம்

அ. மாரிமுத்து, காவல் ஆய்வாளர், மேலூர் மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு அலகு, மதுரை மாவட்டம்.

மா.வசந்தகுமார், காவல் ஆய்வாளர், பெருமாநல்லூர் காவல் நிலையம், திருப்பூர் மாவட்டம்.

நே. ராஜாசிங், காவல் ஆய்வாளர்,நுண்ணறிவு பிரிவு, சென்னை பெருநகர காவல்.

சௌ. ராதாகிருஷ்ணன், காவல் ஆய்வாளர், ஆர்-3 அசோக்நகர் சட்ட ஒழுங்கு காவல் நிலையம், தெற்கு மண்டலம், சென்னை பெருநகர காவல்துறை.

எம்.சி. ரமேஷ், காவல் ஆய்வாளர், அம்பத்தூர் மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு, ஆவடி காவல் ஆணையரகம்.

க. பாபு சுரேஷ் குமார், காவல் ஆய்வாளர், போதைப்பொருள் நுண்ணறிவு பிரிவு, சேலம் அலகு.

த. அன்பரசி, காவல் ஆய்வாளர், மத்தியநுண்ணறிவுபிரிவு,சென்னை.

சு. இரமேஷ், சிறப்பு காவல் உதவி ஆய்வாளர்- 558, அமலாக்கப்பணியகம், தலைமையகம், சென்னை.

ந. தனபாலன், காவல் உதவி ஆய்வாளர், D 3 போத்தனூர் சட்டம் ஒழுங்கு காவல் நிலையம், கோயம்புத்தூர் மாநகரம்.

ம.இரணியன், காவல் உதவி ஆய்வாளர், வலிவலம் காவல் நிலையம், நாகப்பட்டினம் மாவட்டம்.

க. கதிரேசன், காவல் உதவி ஆய்வாளர், குமுளி காவல் நிலையம், தேனி மாவட்டம்.

செ. குருசாமி, சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் - 121, சென்ட்ரல் இருப்புப்பாதை காவல், சென்னை.

எம்.சுசீந்திரன், சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் - -3580, போதைப்பொருள் நுண்ணறிவு பிரிவு, திண்டுக்கல்.

சி.முருகன், காவல் ஆய்வாளர், கடுமையான குற்றங்கள் விசாரணைப் பிரிவு, மதுரை மாநகரம் ஆகியோர் முதலமைச்சர் பதக்கம் பெறுகிறார்கள்.

---

## தி.மு.க. இலக்கிய அணி – கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை – மகளிர் அணி – மகளிர் தொண்டர் அணி ஆகிய அணிகளின்

# மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

### துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அறிவிப்பு



தி.மு.க. இலக்கிய அணி - கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை - மகளிர் அணி - மகளிர் தொண்டர் அணி ஆகிய அணிகளின் மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் 30-06-2025 திங்கட்கிழமை, சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், கீழே குறிப்பிட்டுள்ள கால அட்டவணைபடி நடைபெறும்..

**30. 06 - 2025 - திங்கள்கிழமை**

| | | |
|---|---|---|
| காலை 10.00 மணி | - | இலக்கிய அணி |
| காலை 11.00 மணி | - | கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை |
| பகல் 12.00 மணி | - | மகளிர் அணி<br>மகளிர் தொண்டர் அணி |

இக்கூட்டத்தில் தி.மு.க. இலக்கிய அணி – கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை – மகளிர் அணி – மகளிர் தொண்டர் அணி ஆகிய அணிகளின் மாநில நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை18.
நாள் : 26–06–2025.

**கனிமொழி கருணாநிதி**, எம்.பி.,
துணைப் பொதுச்செயலாளர், தி.மு.க.

---

## தூத்துக்குடி அ.தி.மு.க. பிரமுகர் கொலையில் காரணம் தெரிந்தும்

# அரசியல் ஆதாயம் தேட முயற்சிக்கிறார் பழனிசாமி!

## அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் அறிக்கை!

சென்னை, ஜூன் 27-

அ.தி.மு.க.பிரமுகர் முத்து பாலகிருஷ்ணன் கொலைக்கு காரணம் நிலத்தகராறு. திட்டம்போட்டு கொலை செய்தவரே குற்றத்தை ஒப்புக்கொண்டு கைதாகியுள்ளார். அ.தி.மு.க. பிரமுகர் கொலைக்கு காரணம் தெரிந்தும் அரசியல் ஆதாயம் தேட முயற்சிக்கிறார் எடப்பாடி பழனிசாமி என்று கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் பதிலடி கொடுத்துள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:-

நிலத்தகராறில் அ.தி.மு.க. பிரமுகர் முத்து பாலகிருஷ்ணனை கொலை செய்தவரே குற்றத்தை போலீசாரிடம் ஒப்புக் கொண்டு கைதாகிய நிலையில், உள்ளாட்சித் தேர்தலின்போது நடந்த தகராறை வைத்து அதை தி.மு.க.வுடன் முடிச்சுப் போடும் ஈனச்செயலை செய்ய முயற்சிக்கிறார் எடப்பாடி பழனிசாமி.

தி.மு.க.வுக்கும் தி.மு.க. அரசுக்கும் எதிராக செய்தி பரப்ப எதுவும் கிடைக்காதா என தினமும் அலையும் தினமலர் பத்திரிக்கை, “முத்து பாலகிருஷ்ணனுக்கும், சவுந்திரராஜனுக்கும் இடையே முன்விரோதம் இருந்ததால், அவர் தான் லாரியை ஏற்றி கொலை செய்துவிட்டதாக முத்து பாலகிருஷ்ணன் குடும்பத்தினர் குற்றம் சாட்டினர். போலீசார் அந்த கோணத்தில் விசாரணை நடத்தியதில், திட்டமிட்டு கொலை நடந்தது தெரியவந்தது” என செய்தி வெளியிட்டதை எடப்பாடி பழனிசாமி படிக்கவில்லை போலும்.



தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் தாலுகா, கொல்லம்பரம்பு கிராமத்தை சேர்ந்த அதிமுக பிரமுகர் முத்து பாலகிருஷ்ணன் பைக்கில் சென்றபோது டிப்பர் லாரி நேருக்கு நேர் மோதியதில் பலியானார்.

லாரி ஓட்டுநர் சவுந்திரராஜனிடம் நடத்தப்பட்ட விசாரணையில், ரியல் எஸ்டேட் தொழில் செய்து வந்த முத்து பாலகிருஷ்ணன் வஞ்சகம் செய்து ஏமாற்றியதால் டிப்பர் லாரி ஏற்றி கொன்றதாக கூறியுள்ளார். இதையடுத்து லாரி ஓட்டுநர் சவுந்திரராஜனை போலீசார் கைது செய்துள்ளனர்.

கொல்லம்பரம்பு கிராமத்தில் பால்ராஜ் என்பவருக்கு சொந்தமான நிலத்தை தற்போது கைதாகியுள்ள லாரி ஓட்டுநர் சவுந்திரராஜன் அனுபவித்து வந்துள்ளார். 650 ஏக்கர் அளவுள்ள அந்த நிலத்தில் கல் குவாரி இருப்பதால் அதை வைத்து டிப்பர் லாரி மூலம் பொருட்களை சவுந்திரராஜன் விற்கும் தொழில் செய்து வந்துள்ளார். இந்நிலையில், ரியல் எஸ்டேட் தொழில் செய்து வந்த அ.தி.மு.க. பிரமுகர் முத்து பாலகிருஷ்ணன் அந்த நிலத்தை மற்றொருவருக்கு விற்பனை செய்து பால்ராஜிடம் பணத்தை கொடுத்துள்ளார். தான் அனுபவித்து வந்த நிலத்தை தனக்கு தகவல் கூட தெரிவிக்காமல் விற்பனை செய்து ஏமாற்றியதாக கருதிய சவுந்திரராஜன், அ.தி.மு.க. பிரமுகர் முத்துபாலகிருஷ்ணனிடம் தகராறு செய்துள்ளார்.

அ.தி.மு.க. பிரமுகர் முத்துபாலகிருஷ்ணன் மரணத்திற்கு காரணம் அவர் செய்துவந்த ரியல் எஸ்டேட் தொழில். அதனால் பாதிக்கப்பட்ட சவுந்திரராஜன் பலிதீர்க்கவே லாரி ஏற்றிக்கொலை செய்துள்ளதாக முதற்கட்ட விசாரணையில் தெரியவந்தது ஊடகச் செய்திகளில் தெளிவாக வெளியாகியுள்ள நிலையில், “தி.மு.க. ஆட்சியில் அ.தி.மு.க. பிரமுகரை கொலை செய்தது தி.மு.க. பிரமுகர்” என்று பேசினால் அரசியல் ஆதாயம் கிடைக்கும் என்ற தீய எண்ணத்தில் எடப்பாடி பழனிசாமி இந்த விவகாரம் பற்றி அவதூறை விதைக்க முயற்சிக்கிறார்.

கொல்லம்பரம்பு கிராமத்தை சேர்ந்த தி.மு.க. பிரமுகர் கருணாகரனின் மனைவி கவுரி பஞ்சாயத்து தலைவராக உள்ளார். இவரை எதிர்த்து உள்ளாட்சித் தேர்தலில் அ.தி.மு.க. பிரமுகர் முத்து பாலகிருஷ்ணன் தனது மனைவியை நிறுத்தியுள்ளார். அப்போது சில சச்சரவு ஏற்பட்டுள்ளது. அதை வைத்து அ.தி.மு.க.பிரமுகர் முத்து பாலகிருஷ்ணன் கொலையை தி.மு.க. பிரமுகர் கருணாகரன் மீது சுமத்துவது என்று எடப்பாடி பழனிசாமி அரசியல் ஆதாயக் கணக்கு போட்டுள்ளார்.

முத்து பாலகிருஷ்ணனின் மரண வழக்கு போலீஸ் விசாரணையில் இருக்கும்போதே எடப்பாடி பழனிசாமி தி.மு.க. பிரமுகரை இதில் சம்பந்தப்படுத்தி பேசுவது தி.மு.க. ஆட்சிக்கு அவப்பெயரை ஏற்படுத்தும் கேவலமான எண்ணம்.

ரியல் எஸ்டேட் தொழில் விரோதத்தால் அ.தி.மு.க. பிரமுகர் முத்து பாலகிருஷ்ணன் கொலையான நிலையில், “தட்டிக் கேட்கும் இடத்தில் இருக்கும் எதிர்க்கட்சியினரின் உயிருக்கே பாதுகாப்பற்ற நிலை” என்று எடப்பாடி சொல்வது மோசடி, ஏமாற்றுதல், பாலியல், போதைப் பொருள், கொலை, கொள்ளை சம்பவங்களில் ஈடுபடும் அதிமுக பிரமுகர்களை புனிதர்களாக காட்ட எடப்பாடி பழனிசாமி முயற்சிப்பதைக் காட்டுகிறது.

“சட்டம் ஒழுங்கு சரியில்லை” என்ற அவதூறுக்கு ஆதாரம் தேடி தோற்றுப்போன பழனிசாமி இந்த சம்பவத்தை கையிலெடுத்துள்ளார். இதிலும் அவருக்கு தோல்வியே கிடைக்கும்.

இவ்வாறு அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.


